பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 03 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை ஜூன் நான்காம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

3. விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலும் அன்றையதினமே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4, நாடு முழுவதும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.

5. புதுதில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் மற்றும் கரன்சிங் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில் தேர்தல் அட்டவணையை வெளியிட்டார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரேகட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 20-ஆம் தேதி தொடங்குகிறது,

மனுக்களை தாக்கல் செய்ய 27-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்

மனுக்களை விலக்கிக் கொள்ள 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

மக்களவைத் தேர்தலுடன் தமிழகத்தின் விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் அடுத்த மாதம் 19-ஆம் தேதி இதே அட்டவணைப்படி நடைபெறும் என்றும் திரு ராஜீவ்குமார் கூறினார்,

வாக்கு எண்ணிக்கை ஜுன் மாதம் நான்காம் தேதி நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையர் அறிவித்தார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மக்களவைத் தேர்தலை நேர்மையாகவும், வெளிப்படைத தன்மையுடனும் நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் 96 கோடியே 80 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதில் 47 கோடியே பத்து லட்சம் பெண் வாக்காளர்கள் என்றும், 19 கோடியே 75 லட்சம் பேர் இளம் வாக்காளர்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த தேர்தலில் ஒரு கோடியே 80 லட்சம் பேர் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி 18 வயதை பூர்த்தி செய்யும் அனைவரும் வாக்களிக்க தகுதியுடையவர்கள் என்று தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலுக்காக பத்து லட்சத்து 50 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

55 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு கோடியே 50 லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 40 சதவிகித குறைபாடுடன் கூடிய மாற்றுத்திறனாளிகளும் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் .கூறினார்.

அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்களின் பிரச்சாரமும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக திரு ராஜீவ்குமார் கூறினார்,

அரசியல் கட்சிகள் சிறுவர்களை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

அரசியல் கட்சிகள் சமூக வலைதளங்களை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டுமென்றும் திரு ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டார்.

ஆதாயத்துக்காக செய்திகள் வெளியிடப்படுவதை தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையர் குறிப்பிட்டார்.

தேர்தல் பாதுகாப்புப் பணியில் போதிய அளவு மத்திய பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தலைமைதேர்தல் ஆணையர் கூறினார்.

எல்லையையொட்டிய பகுதிகளில் ட்ரோன் மூலம் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

வாக்குப்பதிவின்போது வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ராஜீவ்குமார் எச்சரித்தார்.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு ராஜீவ்குமார் கூறினார்.

மக்களவைத் தேர்தலோடு ஆந்திரா, அருணாச்சலபிரதேசம், ஒடிசா மற்றும் சிக்கிம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அட்டவணையையும் தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தற்போதுகூட அதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்திய பிரதா சாஹூ கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**[]<<<>>>[]**

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள தயாராக உள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்பட்டதை அடுத்து, சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஜனநாயகத்தின் மிகப்பெரிய திருவிழா தொடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை முன்னிறுத்து இந்த தேர்தலை பிஜேபி தலைமையிலான கூட்டணி எதிர்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானதாக அவர் கூறியுள்ளார்.

பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்றப் பின்னர், அனைத்துத் துறைகளிலும் புதிய சாதனைகள் படைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர் நலனில் அக்கறையின்றி பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக காங்கிரஸ் முன்னாள தலைவர்திரு ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க போதிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழர் உரிமையை மீட்போம் என்ற முழக்கத்தோடு மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள உள்ளதாக அஇஅதிமுக கூறியுள்ளது.,

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, தமிழகத்தின் நலனை பாதுகாக்க தங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

மீனவர் நலனை காக்க மத்திய அரசு தவறிவிட்டதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் திரு முத்தரசன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை கடற்படையினரால் தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினரின்இதுபோன்ற செயலை தடுக்க உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்,

இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் மற்றும்அ வர்களது படகுகளை மீட்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்களவைத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக 54 பறக்கும் படைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு லட்சுமிபதி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் உறுதிமொழியை மகளிர் சுய உதவிக்குழுவினர் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் எடுத்துக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் கற்போருக்கான எழுத்துத் தேர்வு நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி கோவில் ஆழித்தேர் திருவிழா இம்மாதம் 21-ஆம் தேதி நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே அரிசி திருவிழா இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே தொடர்ந்து ஐந்தாவது நாளாக தொடர்ந்து எரிந்து வரும் காட்டுத்தீயை அணைக்க சூலூர் விமானப்படை தளத்திலிருந்து ஹெலிகாப்டர் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருசக்கர வாகனத் திருட்டில் ஈடுபட்ட ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

**[]<<<>>>[]**

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் மற்றும் கரன்சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ராம்குமார் ராமநாதன் 6-2, 6-4 என்ற செட்கணக்கில் வியட்நாமின் **Ly Hoang Nam**-ஐ வென்றார்.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் கரன்சிங் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Evgeny Donskoy**-ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

இந்தூர் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamidipaty** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மகளிர் இரட்டையர் பிரிவில் **Vaidehi Chaudhari – Shrivalli Rashmikaa Bhamidipaty** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் **Taekwondo** ஆசிய தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் **Aman Kumar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் **Taian**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், ஐக்கிய அரபு எமிரேட்டின் **Ghloum-**ஐ வென்றார்.

***End of News***